25th July 1962]

Police colony (Thirupattur taluk)

* 638 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the extent of the building site purchased for the Police colony at Neikuppai, Tirupattur taluk, Ramanathapuram district, the price paid for the acquisition of the site; and

(*b*) whether the Government have received any complaints from the public with regard to the price paid for the site?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) An extent of 2·26 acres was acquired at a cost of Rs. 18,469.

(*b*) No, Sir.

திருச்சி நகர பஸ் நிலையம்.

* *639* கேள்வி.—திரு. எம். எஸ். மணி : *கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) திருச்சியில் தற்சமயம் கட்டப்படப் போகிற பொது பஸ் ஸ்டாண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம், குறுகலான இடமாக இருப்பதால் அங்கு பஸ் ஸ்டாண்டு கட்டாமல் வேறு இடத்தில் கட்ட வேண்டுமென்று அரசாங்கத்திற்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) அப்படியானால், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The question of location of the bus stand is one for the Municipality to decide and the Government did not think it necessary to interfere in the matter.

திரு. மீ. கலியாணசுந்தரம் : *யாரிடமிருந்து இந்த மனு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது ? அந்த மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? முனிசிபாலிடியிடம் எந்த இடத்திலாவது ஒரு இடத்தில் பஸ் ஸ்டாண்டு வைக்கவேண்டும் என்று அரசாங்கம் வற்புறுத்திக் கூறுவார்களா ?*

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The Tiruchirappalli District Bus Operators' Association has objected to the location of the bus stand at the site in East Bouleward Road and urged that the following two sites may be inspected by the then Minister, the vacant site near West Boulewar Road near Gaiety Talkies and the vacant site on the north of St. Joseph's College Hostel grounds.

திரு. மீ. கலியாணசுந்தரம் : *திருச்சி நகராட்சி மன்றத்தில் எந்த இடத்தில் பஸ் ஸ்டாண்டு நிறுவுவது என்று முடிவு செய்யும் பொறுப்பை திருச்சி கலெக்டருக்குக் கொடுத்தார்கள். திருச்சி கலெக்டர் அதைத் திருச்சி மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் வைத்து முடிவெடுத்தார்கள். கீழ புலவார் ரோட்டில் பஸ் ஸ்டாண்டு*

வைப்பதற்குச் சீக்கிரம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சர்க்கார் மோட்டார் வெஹிகிள்ஸ் ஆக்டின் கீழே திருச்சி நகராட்சி மன்றத்திற்கு யோசனை கூறுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபற்றி நகராட்சியினர் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னேன். ஏதாவது அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு தவறினால், மோட்டார் வெஹிகிள்ஸ் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டுமா என்று அரசாங்கம் பின்னால் யோசித்து, வேண்டுமானால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

அளியார் அணை

* **640 கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அளியாறு அணை வேலைகள் முடிந்துவிட்டனவா ?

(இ) எப்போது விவசாயிகளுக்குத் தண்ணீர் கொடுக்கப்படும் ?

(உ) இதனால் எத்தனை எக்கர் நிலம் பயன் அடையும் ?

THE HON. SRI V. RAMAIAH : (a) The Aliyar dam works are almost nearing completion.

(b) Water is proposed to be let down from the Reservoir during October 1962, if sufficient water is available.

(c) About 7,500 acres are proposed to be benefited under Vettaikaranpudur and Pollachi Canals initially subject to availability of water in the Aliyar river.

Sir, after submission of this answer, I would like to give the latest position about paragraph (b). I have to state that sufficient water is available now. I am glad to say that water is available and water will be let out on the period fixed, i.e., in October.

திரு. ஜே. மாதா கவுடர் : பொள்ளாச்சி தாலுகாவில் எந்தெந்த கிராமங்களுக்குப் பாயும் என்று சொல்ல முடியுமா ? எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு பாயமுடியும் என்பதைப்பற்றியும் சொல்ல முடியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : ஏக்கரைப் பொறுத்தவரையிலும் 7,500 ஏக்கர். என்னென்ன கிராமங்களுக்கு தண்ணீர் பாயும் என்று திட்டவட்டமாக என்னால் இப்பொழுது சொல்ல முடியாது. ஆனால் இரண்டு கால்வாய்களுக்கு அதாவது வேட்டைக்காரன் புதூர் கால்வாய், பொள்ளாச்சி கால்வாய்களுக்கு தண்ணீர் விடப் படும்.

திரு. க. ர. நல்லசிவம் : புஞ்சைப் பாசனத்திற்கு தண்ணீர் விடப்படுகிறதா அல்லது நஞ்சைப் பாசனத்திற்கு தண்ணீர் விடப் படுகிறதா, புஞ்சைப் பாசனத்திற்கு தண்ணீர் விட்டால்,